# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் A+ தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.
தமிழ்நாடு, இந்தியா

**முனைவர். பா. ஜெயபிரகாஷ், M.L.I.Sc., M. Phil., Ph.D.,**
**தேர்வு நெறியாளர் (பொ)**

அலுவலகம் : 0431- 2407016, 2407060
தொலைப்படி : 0431 – 2407444
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in

நாள் : 07.10.2024

முதுநிலை/தேர்வுக்கட்டணம்/செய்முறைத்தேர்வு/களப்பணி/நவம்பர்-2024

பெறுநர்,

முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் (தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் நீங்கலாக)

அய்யா/அம்மையீர்,

பொருள் : நவம்பர்-2024 – முதுநிலை பட்ட மற்றும் பட்டயப்படிப்பு – பருவத்தேர்வு – கட்டண விபரம் - செய்முறைத் தேர்வு – களப்பணி – தேர்வு நாட்கள் அறிவிப்பு – தொடர்பாக.

பார்வை : துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள் : 07.10.2024.

*****

நவம்பர்-2024 நடைபெறவிருக்கும் அனைத்து முதுநிலை பட்டப்படிப்புகள் (M.A., M.Sc., M.com., M.S.W., M.B.A., & M.C.A) மற்றும் பட்டயப்படிப்புகளுக்கான (P.G. Diploma Courses) பருவத்தேர்வுக் கட்டணம், எழுத்துத்தேர்வுகள், செய்முறைத்தேர்வுகள், களப்பணிகளுக்கான அட்டவனை கீழ் கண்டுள்ளவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | விவரங்கள் | | நாள் மற்றும் கிழமை |
|---|---|---|---|
| 1. | பருவத் தேர்விற்கான விபரங்கள் அனைத்தும் கட்டணத்துடன் பெற்று பல்கலைக்கழக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்.** | : | **15.10.2024 செவ்வாய்க் கிழமை** |
| 2. | தேர்வுக்கட்டணத்தை தாமதக்கட்டணத்துடன் (ரூ.300+18% G.S.T) உடன் பெற்று பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்** | : | **18.10.2024 வெள்ளிக் கிழமை** |
| 3. | 18.10.2024-ம் தேதிக்குப்பிறகு கட்டணம் செலுத்துபவர்கள் (ரூ.300+500=800+18% G.S.T) உடன் பெற்று பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்.** | : | **22.10.2024 செவ்வாய்க் கிழமை** |
| 4. | மாணாக்கர்கள் வருகைப்பதிவு தொடர்பான சான்றிதழ் (Condonation) உட்பட உரிய கட்டண விவரங்கள் மற்றும் அனைத்துவித படிவங்களையும் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள். | : | **25.10.2024 வெள்ளிக் கிழமை** |
| 5. | **தேர்வு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியவர்கள்** | | |
| | 5.1 | 2021-2023, 2022- 2024ல் முதுநிலைப் பயின்று நிலுவைத்தாள் உள்ளவர்கள். | |
| 6. | **பல்கலைக்கழக தேர்வு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியவர்கள்.** | | |
| | 6.1 | மறு சேர்க்கை (Re-admission), மீள்சேர்க்கை (Re-do) பெற்றவர்கள். | |
| | 6.2 | தொலைக்கல்வி, தன்னாட்சி கல்லூரிகள், மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கை (Transfer Admission) பெற்றவர்கள். | |
| | | வரிசை எண் 6.1 மற்றும் 6.2-ல் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யும் பொழுது பதிவாளரின் அனுமதிக் கடிதம் மற்றும் கூடுதல் தாள்கள், மாற்றுத் தாள்கள் ஆகியவற்றின் கடித நகல்களுடன் மாணவர்களது செய்முறை மற்றும் எழுத்துக்தேர்விற்கான அகமதிப்பெண்களையும் கண்டிப்பாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| | செய்முறைத் தேர்வு & களப்பணி (PRATICAL EXAM & FIELD WORK) | | |
| 7. | முதுநிலை பட்ட மற்றும் பட்டயப்படிப்புகளுக்கான செய்முறைத்தேர்வுகள் மற்றும் களப்பணி நடைபெறும் நாட்கள். | : | 28.10.2024 திங்கள் கிழமையிலிருந்து 08.11.2024 வெள்ளிக் கிழமை வரை |
| 8. | செய்முறைத்தேர்வு, களப்பணி குறித்த தேர்வு கால அட்டவனைகள் அணைத்தும் இவ்வலுலகம் வந்த சேர கடைசி நாள் | | 21.10.2024 திங்கள் கிழமை |
| 9. | முதுநிலை பட்டப்படிப்புகளுக்கான எழுத்து தேர்வுகள் துவங்கும் நாள். | | 27.11.2024 புதன் கிழமை |
| 10. | முதுநிலை பட்டயப்படிப்பிற்கான தேர்வுகள் துவங்கும் நாள் | | 09.12.2024 திங்கள் கிழமை |

மேலும் 2024-ல் சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் பற்றிய சுயவிவரங்களையும், (Bio-Data) பாடக்குறியீட்டு (Subject Code) விவரங்களையும், மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களின் நடப்பு மற்றும் நிலுவைத்தாள்களின் பாடக்குறியீட்டு (Subject Code) விவரங்களையும் இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பல்கலைக்கழக இணையதளத்தில் (Web Portal) பதிவேற்றம் செய்யும் மாணாக்கர்களின் பெயர், பெயரின் தலைப்பெழுத்து (Initial) மற்றும் பிறந்த நாள் (Date of Birth) போன்ற விவரங்களையும் இளநிலை மதிப்பெண் பட்டியலின்படியே பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

மேலும், மாணாக்கர்களின் பெயர்கள் மற்றும் இதர தரவுகளில் நுழைவுச் சீட்டு (Hall Ticket), பருவத்தேர்விற்கான பதிவுப்பட்டியல் (Galley), தேர்வு முடிவுகள் (Result) ஆகியவற்றில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை உடனடியாக சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களும் நடப்புப் பருவத் தேர்வுத்தாள்கள், மற்றும் அனைத்து நிலுவைத்தாள்களும் சேர்த்து கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும்.**

அவ்வாறு நடப்புப் பருவத் தேர்வுக்குப் பதிவு செய்யத் தவறினால், அம்மாணவர்கள் அடுத்த பருவத் தேர்விற்கு பதிவு செய்ய இயலாத நிலை ஏற்படும். விடுபட்ட பருவத்தை மீளப் பயிலுதல் (Re-do) என்ற வகையில் நான்கு பருவங்களும் முடித்த பிறகு, படிக்க நேரிடும் என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூாயில், முந்தைய பருவத் தேர்விற்குப் பதிவு செய்ய இயலாத மாணவர்கள் குறித்து. அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணைய முகப்பில் (Exam Portal) பதிவுசெய்ய வேண்டுமெனில், பதிவாளர் அலுவலக “D” பிரிவின் மூலம் கீழ்கண்ட இனத்திற்கு வழங்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. Re-do (மீளச்சேர்ககை)
2. Re-Admission (மறுச்சேர்ககை)
3. Transfer (மாற்றுச்சேர்ககை)

**மேலும், இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் பாடக்குறியீட்டு விவரங்களை மற்றும் கட்டண விவரங்களைப் பதிவிறக்கம் செய்து, அனைத்து முதுநிலை (M.A., M.Sc., M.Com., M.S.W., M.B.A. & M.C.A) பாடவரியாக இணையத்தில் பதிவேற்றப்படும் கட்டண விவரங்களின் (Form-I) கூட்டுத் தொகையுடன், வங்கியில் செலுத்தப்படும் கட்டணத்தொகையை நேர்செய்து சுருக்கப்பட்டியலுடன் (Abstract) பல்கலைக்கழக இணையதள வங்கி கணக்கில் செலுத்திய ரசீது நகலையும் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.**

இளநிலை மற்றும் முதுநிலை பருவத்தேர்விற்கான தேர்வுக்கட்டணங்களை தனித்தனியாக நுழைவாயிலில் (Gateway) செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் தணிக்கைத்துறை மற்றும் அரசாங்கத்திற்கு தேர்வு கட்டண விவரங்களை தனித்தனியாக தெரிவிக்க வேண்டியுள்ளது. மேலும், தேர்வுக்கட்டணம் வங்கியின் மூலம் செலுத்தியபின் அந்த ரசீதினை (Challan) Scan செய்து பல்கலைக்கழக இணையமுகப்பில் (Portal) பதிவேற்றம் செய்யப்படவேண்டும். அவ்வாறு பதிவிடாத கல்லூரி மாணவர்களுக்கு தேர்வு நுழைவுச்சீட்டு (Hall Ticket) வழங்க இயலாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில் பயிலும் / தேர்வு எழுதும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு (Attendance) சதவீத விபரங்களை இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும் (Form – II, Form – III, Form – IV) எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், வருகைப்பதிவு சதவீத குறைவுக் கட்டண (Condonation Fee) விவரங்களுடன் இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீதையும், தேவையானவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் நகலையும் இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்து அந்நகல்களுடன் வருகைப்பதிவுக் குறைவுடைய மாணாக்கர்கள் யாரும் இல்லாவிடில் **'வருகைப்பதிவுக் குறைவு இல்லை'** என்று துறைவாரியாக பட்டியலைத் தயார் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டப்படுகிறது.

**பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் அறிவுறுத்தலின்படி 2020 – 2022 கல்வியாண்டிற்கு முன்னர் கல்லூரியில் பயின்று ஏதேனும் நிலுவைத்தாள்கள் இருப்பின் அம்மாணவர்கள் இத்தேர்விற்கு பதிவு செய்ய இயலாது.**

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்குத் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர் (Scribe) நியமனம் செய்தல் மற்றும் பகுதி-2 (Part-II) ஆங்கிலம் மொழிப்பாடத்திற்கு விலக்குப் பெற்றுள்ள விவரங்களுடன், அம்மாணாக்கர்கள் குறித்த பட்டியலைத் தனியே அனுப்பிவைக்க வேண்டும்.

மேலும், மீளப் பயிலுதல் (Re-do), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer) பெறும் மாணவர்களின் அனுமதிக் கடிதத்துடன் தேர்வுக் கட்டணங்களையும், விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்.

**மேலும், எக்காரணம் கொண்டும் இளநிலைப் பட்டத் (UG) தேர்வுக் கட்டணத்துடன் முதுநிலைப் பட்டத் (PG) தேர்வுக் கட்டணத்தைச் சேர்த்துச் செலுத்தக்கூடாது.**

மேலும், கல்லூரியில் பயிலும் மாணவர்களின் அகமதிப்பெண்கள், செயல்முறை தேர்வு மதிப்பெண்கள். களப்பணி தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவற்றை தேர்வு முடிந்த அக, புறத் தேர்வாளர்களின் கையொப்பம் மற்றும் முதல்வரின் மேலொப்பத்துடனும் தேர்வு நெறியாளருக்கு அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கவும். மேலும் 11.11.2024க்குள் இணையதளத்தின் வாயிலாக exams1.bdu.ac.in தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலே கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, தேதி வரியாக மட்டுமே செயல்முறை மற்றும். களப்பணித்தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட தேதிகளுக்கு பின்னர் நடத்தபடக் கூடாது.

பல்கலைக்கழக ஒருமை/இருமைப் (ODD/EVEM Semester) பருவ செயல்முறை தேர்வில் தேர்ச்சிப் பெறாத மாணவர்கள் அந்தந்த பருவத்தேர்வில் மட்டும்தான் செயல்முறை தேர்வுகளை (Practical Examinations) செய்ய இயலும். இதனை கல்லூரியில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கும் தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எழுத்து தேர்விற்கான அகமதிப்பெண்களை உரிய காலத்திற்குள் exams1.bdu.ac.in –ல் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களின் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாக பாரமரிக்க வேண்டும்.

ஒரு நேரத்திற்கு (Session) பத்து மற்றும் 10-க்குக் குறைவாக மாணாக்கர்களைக் கொண்டுள்ள பாடப்பிரிவுகளுக்குத் தேர்வுக் கால அட்டவணையின்படி அந்தந்த கல்லூரிகளே செய்முறைத் தேர்வுகளை நடத்திக் கொள்ள வேண்டும்.

தேர்வு நெறியாளரின் ஆணையின்படி ஒரு நேரத்திற்கு (Session) பத்துக்கு (10-க்கு) மேல் உள்ள மாணவர்களை கொண்ட பாடங்களுக்கு நவம்பர் 2024 செய்முறை தேர்விற்கு நியமனம் செய்யப்பட்ட புறத் தேர்வாளர் தேர்வு பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்த கல்லூரி முதல்வர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் / தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத் தேர்வாளர்களாக நியமனம் செய்திடல் வேண்டும். **அன்றைய தினமே, கல்லூரி நியமனம் செய்த புறத்தேர்வாளர் குறித்த விவரத்தைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்கவேண்டும்.**

மேலும், கல்லூரிகளில் அந்தந்தப் பாடப்பிரிவுகளுக்குப் பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செய்முறைத் தேர்வை நடத்திட வேண்டும்.

அவ்வாறு நடத்தும்பொழுது ஏற்கனவே. 10 மற்றும் 10-க்குக் கீழ் உள்ளவாறு பிரித்து செய்முறைத் தேர்வுக்கான கால அட்டவனையை அனுப்பி இருந்தால், ஒரு நேரத்திற்கு (Session) மாணாக்கர்களின் எண்ணிக்கையை 10-க்கு மேல் உள்ளவாறு முற்பகலிலோ அல்லது பிற்பகலிலோ நடத்திடும் வகையில் மாற்றி அமைத்து அருகிலுள்ள கல்லூரியிலிருந்து புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட வேண்டும்.

இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்றம் செய்து மாணவர்களுக்கு தேர்வு முடிவுகளை சரியாகவும் / விரைவாகவும் வழங்கிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர் (பொ)**

நகல் :

1. இயக்குநர் (பொ), தகவலியல் மையம், பொது நூலகம் முதல் தளம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024.
2. நேர்முக உதவியாளர், தேர்வு நெறியாளர்.
3. மந்தனப்பிரிவு – 1, தேர்வுப்பிரிவு.
4. மந்தனப்பிரிவு – 2, தேர்வுப்பிரிவு.
5. கணினிப்பிரிவு, தேர்வுப்பிரிவு.
6. கணக்குப்பிரிவு, தேர்வுப்பிரிவு.